**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. S.T.C.No. 496/2023**

**Deposition of Witness for Complainant PW1**

**திரு. ரமேஷ் த/பெ. ஹாலன் வயது. 49 ஊர். கூக்கல், கோத்தகிரி**

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**17.07.2026 Witness Signature :**

**PW1 மீண்டும் மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை 03.55 P.M**

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். விவசாயம் அல்லாமல் வேறு எதாவது தொழில் செய்கிறேனா என்றால் தற்போது செய்யவில்லை. முன்னதாக என்ன தொழில் செய்தேன் என்றால் Consultancy. Consultancy என்பது Bank loan வாங்கி தருவது போன்ற வேலை. Consultancy பதிவு செய்திருந்தேனா என்றால் செய்திருந்தேன். பதிவு செய்த ஆவணங்கள் எதாவது இந்த புகாரில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தேவை ஏற்பட்டால் தாக்கல் செய்த தயாராக உள்ளேன். நான் வங்கி கடன் வாங்கி தருவதாக சொன்னநிலையில் வங்கியில் வேலை செய்தேனா என்றால் வங்கியில் வேலை செய்யவில்லை, வேறு ஒரு Consultancyல் வேலை செய்திருக்கிறேன்.

2. வங்கியில் கடன் வாங்கி தருவதற்கு எதுமாதிரியான ஆவணங்களை நான் வாங்குவேன் என்று சொன்னால் செக்யூரிட்டி ஆவணங்கள் வாங்குவேன். அது என்னென்ன ஆவணங்கள் என்றால் Address proof, ID Proof, ஆவணங்களின் நகல் வாங்குவேன். ஆவணங்களின் நகல் என்பதில் என்னென்ன நகல் வாங்குவேன் என்றால் சொத்து, வீடு சம்பந்தமான

ஆவணங்கள் வாங்குவேன். யார் யாருக்கெல்லாம் நான் வங்கி கடன் வாங்கி கொடுத்திருக்கிறேன் என்றால் நிறைய பேருக்கு வாங்கி கொடுத்திருக்கிறேன். அவர்களிடம் எல்லாம் ஆவணங்கள் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். வாங்கி சரிபார்த்து வங்கியில் கொடுத்து விடுவேன். யார் யார்களிடம் என்னென்ன ஆவணங்கள் வாங்கினேன் என்பதற்கு பதிவேடுகள் எதாவது பராமரித்து வந்தேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரியை எப்படி தெரியும் என்றால் கோத்தகிரியில் ஜெராக்ஸ் கடை வைத்திருந்ததால் தெரியும்.

3. ஆஜர் எதிரிக்கு பணம் கொடுத்ததாக கூறியுள்ள நிலையில் எங்கு வைத்து யார் முன்னிலையில் கொடுத்தேன் என்று புகாரில் கூறியுள்ளேனா என்றால் யார் முன்னிலையில் கொடுத்தேன் என்று சொல்லவில்லை. புகார் மனு மற்றும் அதனுடன் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் தாக்கல் செய்தேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. ஆஜர் எதிரிக்கு பணம் கொடுத்ததாக கூறியுள்ள நிலையில் அதற்கான குறிப்புகள் ஏதேனும் எழுதி வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் வருமான வரி தாக்கல் செய்கிறேன். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்பட்ட பணத்திற்கும் வருமான வரி கட்டியுள்ளேனா என்றால் கட்டவில்லை. கடைசியாக எந்த ஆண்டு வருமான வரி கட்டினேன் என்றால் சரியாக நியாபகமில்லை. ஸ்ரீவாரி பைனான்ஸ் என்று நான் பைனான்ஸ் நடத்தி வந்தேன் என்றால் பைனான்ஸ் மற்றும் Consultancy நடத்தி வந்தேன். ஸ்ரீவாரி பைனான்ஸ்க்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவை ஏற்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். இப்போதும் நான் பைனான்ஸ் செய்து வருகிறேன் என்று சொன்னால் குறைத்துக்கொண்டேன். தெரிந்தவர்களுக்கு மட்டும் கொடுப்பேன். பைனான்ஸ் வைத்திருப்பவர்கள் யாருக்கு எவ்வளவு தொகை கொடுக்கிறோம்

என்று கணக்கு பராமரிப்பார்கள் என்றால் நான் பராமரிக்கவில்லை.

4. எதிரி எனக்கு கொடுத்த காசோலையில் யார் எழுதினார்கள் என்றால் எதிரியே எழுதிக் கொடுத்தார். காசோலை எந்த தேதியில் கொடுத்தார்கள் என்றால் 18.07.2022ம் தேதியன்று பணம் வாங்கிக்கொண்டு அதே தேதியில் பின்தேதியிட்டு காசோலை கொடுத்தார். எதிரிக்கு கொடுத்த பணத்திற்கு வட்டி விகிதம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அவசர தேவைக்காக கொடுத்தேன். எனது புகார் மனுவில் எதிரியின் காசோலை 18.08.2022 ம் தேதியன்று திருப்பப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் காசோலை சம்பந்தமான வழக்குள் நிறைய தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். 10 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு காசோலை வழக்குகள் தொடர்பான நடைமுறைகள் எல்லாம் தெரியும் என்றால் சரிதான். எனக்கு சாட்சிகள் சொல்வது பழக்கம்தான் என்றால் சரிதான். எனது புகார் மனுவில் எதிரிக்கு அறிவிப்பு அனுப்பிய தேதி 13.09.2022 என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக கோத்தகிரிக்குள்ளேயே அறிவிப்பு அனுப்பினால் எத்தனை நாட்களுக்குள் போய் சேரும் என்றால் எனக்குத் தெரிந்து 10 நாட்கள் ஆகும். வேறு வழக்கிற்கு அனுப்பிய அறிவிப்புகள் 3, 4 நாட்களில் சேரும், ஒரு சில 10 நாட்களும் ஆகும்.

5. பொதுவாக அறிவிப்பு அனுப்பினால் அஞ்சலக ரசீது கொடுப்பார்கள், அந்த ரசீதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அஞ்சல் அட்டை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள அஞ்சல் அட்டை வா.த.சா.ஆ.4 ல் 24.09.2022 என்பது 27.09.2022 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அஞ்சல் அட்டை வா.த.சா.ஆ.4 ல் 24.09.2022 எதை வைத்து நான் சொல்கிறேன் என்றால் எதிரி வாங்கிய தேதியை சொன்னேன். நான் ஒரு அறிவிப்பு அனுப்பும்போது அஞ்சல் துறை முத்திரை மற்றும் தேதியுடன் திரும்ப வந்து சேரும் என்றால் சரிதான். நான்

சொல்வதுபோல் அஞ்சல் ஒப்புதல் அட்டையில் முத்திரை உள்ளதா என்றால் உள்ளது. நான் காலதாமதத்தை மன்னிக்க கோரி மனு செய்தேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதானா என்றால் சரிதான். அதை படித்துப் பார்த்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் அஞ்சலக அட்டையில் முத்திரை இல்லாததால் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய தேதி தெரியவில்லை என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் அறிவிப்பு அனுப்பிய தேதி தொடர்பாக புகாரிலும், காலதாமதத்தை மன்னிக்க கோரிய மனுவிலும், அதனடன் தொடர்பான பிரமாண வாக்குமூலத்திலும் முன்னுக்குப் பின் முரணாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

6. காலதாமதத்தை மன்னிக்க கோரிய மனுவில் அஞ்சல் அட்டையில் முத்திரை இல்லை என்றால் அஞ்சலக ரசீது தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் அந்த அளவிற்கு நுணுக்கம் எனக்குத் தெரியவில்லை. நான் அறிவிப்பை சரியான காலத்திற்குள் அனுப்பியிருந்தால் மேற்கூறியவற்றை நான் செய்திருப்பேன் என்றாலும் காலம் கடந்து தாக்கல் செய்ததால் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்குத் எதிரியின் அண்ணன் மணிகண்டனை தெரியுமா என்றால் தெரியாது, ஒரு முறை காவல் நிலையத்தில் வைத்து பார்த்திருக்கிறேன். எதற்காக காவல் நிலையம் சென்றேன் என்றால் எதிரி என்மீது ஒரு புகார் மனு கொடுத்திருந்தார் அதற்காக சென்றேன். எதற்காக புகார் கொடுத்திருந்தார் என்றால் ஆவணங்கள் என்னிடம் கொடுத்ததாக புகார் கொடுத்தார். எதற்காக ஆவணம் கொடுத்தார் என்று புகாரில் சொல்லவில்லை, கோத்தகிரி காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரித்தார்கள். பொதுவாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றால் எதற்காக புகார் கொடுக்கிறேன் என்று விசாரிப்பார்கள் என்றால் சரிதான். முகாந்திரம் இல்லாமல் என்னை அழைத்து

விசாரித்திருக்க மாட்டார்கள் என்று சொன்னால் புகார் கொடுத்தாலே விசாரிப்பார்கள்.

7. எதிரியின் அண்ணனுக்கு முன்பு நான் வட்டிக்கு பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரியின் அண்ணனுக்கு கொடுத்த கடனுக்காக எதிரியிடம் செக்யூரிட்டிக்காக காசோலை வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் அண்ணனுக்காக கொடுத்த ஆவணங்களை திருப்பி கேட்டதனால் கொடுக்காமல் செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலை வைத்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் எதிரியின் கையெழுத்து மாறியுள்ளதா என்றால் தெரியாது. எதிரி நிரப்பப்படாத காசோலையை என்னிடம் கொடுத்தார் என்றாலும், அதை நான்தான் நிரப்பினேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியுடையது இல்லை என்று கையெழுத்து நிபுணருக்கு அனுப்புவதற்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 17.07.2026
**Judicial Magistrate,**
**Kotagiri**